2013 ஏப்ரல் 25]

தெரிவித்துக்கொள்கிறேன். 2013—2014 ஆம் நிதியாண்டில், அப்பகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பம்பை ஆற்றின் குறுக்கே பாலம் விரைந்து கட்டப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 312, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

312—

நியாய விலைக் கடை

***7679—திரு. சு. ரவி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, வடமாம்பாக்கம் ஊராட்சி, பாப்பாங்குளம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, பாப்பாங்குளம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறியோரின், வறுமையில் வாடி நிற்போரின் வாட்டத்தைப் போக்கிட 'அம்மா உணவகம்' அமைத்து, சிட்டுக் குருவிக்கும் உணவு கொடுத்த மகாகவி பாரதி போல், சிறார் உட்பட ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ஏழைகளுக்கு தினந்தோறும் வயிறார உண்பதற்கு, "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என்ற புறநானூற்றின் வரிகளுக்குப் புத்துயிர் கொடுத்த புண்ணியத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எம்மாநிலத்திலும் இல்லாத வகையில், இம்மாநிலத்தில் மட்டும் பொது விநியோகத் திட்டத்தில் எல்லோருக்கும் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கி, தென்னகத்தின் பெண்ணரசியாய், நாளைய பாரதத்தின் பேரரசியாய் விளங்கப்போகும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட பாப்பாங்குளம் கிராமத்தில் வாழும் இஸ்லாமிய மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை இந்த அவைமுன் வினாவாகத் தொடுத்து, விடை பெறுவதற்குள் அந்தப் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுத்த, மக்கள் அவசியத்தை அறிந்து, திட்டங்கள் தரும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையால் அமைக்கப்பட்டிக்கிற, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அந்தப் பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவைகளை அறிந்து, அந்தத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுகிறவர் மக்கள் தலைவி, இதய தெய்வம்

2013 ஏப்ரல் 25]

புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனை நாடறியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அந்த அடிப்படையிலேதான் உடனடியாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரக்கோணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கான போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கினால், உடனடியாக அந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 313, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

313—

பால் கொள்முதல் நிலையம்

***3238—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, கும்மிடிப்பூண்டி